ஆகவே, மழைநீரைச் சேகரிப்பதற்கு அரசு எல்லா வகையிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு, கடைசியாக ஒரு கோரிக்கை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம், வேண்டாம். உரையை முடியுங்கள் (குறுக்கீடு) கோரிக்கையைத் தனியாக வைத்துக்கொள்ளலாம்.

திரு. ஜி.கே. மணி: எழுதிக் கொடுத்துவிடுகிறேன். இதுவரையிலே பேச அனுமதி அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் முத்தமிழ் அறிஞர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-20

6. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 8-4-2002 திங்கட்கிழமை அன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 8-4-2002 (திங்கட்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

8-4-2002 திங்கட்கிழமை அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.